# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (05.05.2021 முதல் 09..05.2021 )

**அறிக்கைஎண் 036/2021** **தேதி. 04.05..2021**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

.

**ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (30..04 .2021 முதல் 03.05 .2021) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு - 09..05.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **30/04** | **01/05** | **02/05** | **03/05** | **தேதி** | **நாள்-1 05/05** | **நாள்-2 06/05** | **நாள்-3 07/05** | **நாள்-4 08/05** | **நாள்-5 09/05** |
| 0.5 | 0.0 | 0.0 | 4.5 | மழை (மி.மீ) | 3 | 1 | 6 | 3 | 1 |
| 37 | 36 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 25 | 25 | 26 | 25 | குறைந்த பட்ச வெப்நிலை (°செ) | 25 | 25 | 26 | 26 | 26 |
| 5 | 5 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 72 | 71 | 67 | 77 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 68 | 68 | 68 | 72 | 72 |
| 37 | 35 | 33 | 41 | குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 42 | 42 |
| 9 | 11 | 11 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | 8 | 8 | 8 | 10 | 10 |
| 90 | 70 | 70 | 70 | காற்று வீசும் திசை | 90 | 90 | 70 | 70 | 70 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (05. 05. 2021 முதல் 09 05 .2021 )**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது.. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 68 முதல் 72 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 42 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலைத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. நீர்பாசனத்தை தள்ளிப்போடவும் மற்றும் கோடை உழவு செய்யவும்.<br>இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். |
| **சோளம்** | விதைப்பு | இலேசானதூறல் மழையே எதிர்பார்க்கப்படுவதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைத்து தொடர்ந்து நீர் பாசனம் செய்யவும். |
| கம்பு | விதைப்பு **மற்றும் இளம் பருவம்** | இறவை கம்பு விதைத்தல் மற்றும் மற்றும் பாடுவாசியை தொடரவும். விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி) விதைக்கவும். |
| எள் | காய் பிடிக்கும் பருவம் | தற்போது நிலவும் அதிக பகல்நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக பிப்ரவரி மாதம் 15 –ம் தேதி கோடையில் இறவை எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. இதனை கண்காணித்து மாலை நேரங்களில் 5 சதம் வேப்பம்கொட்டை வடிகரைசலை தெளிக்கவும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரிக்க வேண்டும்.<br>தற்போது நிலவும் அதிக பகல்நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக நடவு செய்த கரும்புக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுவதன் மூலம் முளைப்புத்திறனை அதிகப்படுத்தலாம். |
| காய்கறிகள் | வளர் பருவம். | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் காய்கறிகளில் சிலந்தி தாக்குதல் வர வாய்ப்புள்ளது. ஆதலால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் டைக்கோபால் 2.5 மிலி அல்லது நனையும் கந்தநகம் 3.5 கி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| வாழை | | கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>பரவலரக வாழையில் குருத்து அழுகல் நோய் காணப்படுகிறது. இதற்கு 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பீளீச்சிங் பவுடரை கலந்து மரத்தின் அருகே ஊற்றவேண்டும். இதை நோய் வந்வதற்கு முன்பு செய்தால் நோய் வராமல் பாதுகாக்கலாம். |
| தென்னை | | தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழை நீரை சேகரிக்கலாம்.<br>இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். |
| மஞ்சள் | நடவு | நிலவும் வானிலையில் மஞ்சள் பயிரிடுவதற்கு நிலம் தயாரித்து விதைப்பு செய்யலாம். |

| | | |
|---|---|---|
| மரவள்ளி கிழங்கு | | கோடையில் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் நீரின் உப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த உப்புத்தண்ணீரை வயலுக்கு பாய்ச்சும் பொழுது பயிர்களில் குறிப்பாக மரவள்ளி கிழங்கில் அடி இலைகள் அதிக உப்பின் காரணமாக பழுப்பு நிறமாக மாறி காய்ந்துவிடும். இதற்கு கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மேலாண்மை உத்திகளை கடைபிடித்து தாக்குதலின் தன்மையை குறைக்கலாம்.<br>1. அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்திருப்பதன் மூலம் உப்பு மேலே வராமல் தடுக்கவும்.<br>2. காலை மற்றும் மாலை வேளைகளில் மட்டும் நீர் பாசனம் செய்யவும்.<br>3. நல்ல தண்ணீரை காலை, மாலை வேளைகளில் இலைகளின் மேல் தெளிக்கவும்.<br>4. தொழு உரங்களை இடுவதன் மூலம் உப்பின் தாக்குதலை குறைக்கலாம்.<br>5. நல்ல தண்ணீர் கிடைத்தால் தனியாக அல்லது உப்புத் தண்ணீருடன் கலந்து நீர் பசானம் செய்யவும். |
| காளான் | | வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் காளான் குடில்களில் வெப்பநிலையைக் குறைக்க கூடாரத்தின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம். |
| கால்நடைகள் | | அதிக வெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால், கால்நடைகளை பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம்.<br>காற்றின் வெப்பநிலை அதிகரித்து வருவதால் கால்நடை குடில்களுக்குள் குளிர்ச்சியை ஏற்படுத்தி பால் உற்பத்தியை பராமரிக்கவும்.<br>அதிக வெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால், மழையில்லாத இடங்களில் கால்நடை மற்றும் கோழிக'குடில்களைச்சுற்றி நனைத்த சாக்கினை தொங்கவிடவும். |

**குறுஞ்செய்தி**

- தற்போது நிலவும் அதிக பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக நடவு செய்த கரும்புக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுவதன் மூலம் முளைப்புத்திறனை அதிகப்படுத்தலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம்,**
**கோவை**